ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

धवलयति समग्रं चन्द्रआजीवलोकं
किमिति निजकलङ्कं नात्मसंस्थं प्रमार्ष्टि ।
भवति विदितमेतत् प्रायशस्सज्जनानां
परहितनिरतानामादरोनात्मकार्ये ॥ सुभाषिते ।

தவளயதி ஸமக்ரம் சந்த்ரஜீவலோகம்
கிமிதி நிஜகளங்கம் நாத்மஸம்ஸ்தம் ப்ரமாஷ்டி ।
பவதி விதிதமேதத் ப்ராயசஸ்ஸஜ்ஜநாநாம்
பரஹிதநிரதாநாமாதரோநாத்மகார்யே ॥

திங்களானவன் பிராணிகளால்நிரம்பிய இவ்வுலகம்முதற்கொண்டு எல்லாவுலகங்களிலுமுள்ள சகலவஸ்துக்களையும் சுத்தம்பண்ணி வெளுப்பாகச் செய்துவிடுகிறான். இவ்வித சக்திவாய்ந்த இவன் தனது சரீரத்திலிருக்கும் தன்னுடைய களங்கததை என் சுததம் செய்து கொள்ளவில்லை என்றால இவ்விதம் அதற்குக்காரணமென்று அறியப்படுகின்றது. பெரும்பாலும் பிறருக்கு நன்மை செய்வதிலேயே எப்பொழுதும் முயற்சியுடைய மஹான்களுக்குத் தம்முடைய காரியத்தில் பிரவிருத்தியேற்படாது என்பதேயாகும.

உலகில் மானிட சரீரத்தையடைந்து நல்லது, கெட்டது, பாபம், புண்ணியமென்கிற பகுத்தறிவையும் பெற்ற ஜனங்கள் தமதுசரீரசுகத்திற்கு வேண்டிய காரியங்களை கவனிப்பதற்காகவே இஜ்ஜன்மாயேற்பட்டிருக்கிறதென்று கருதக்கூடாது.

काकोपि जीवति चिराच्च बलिंच भुङ्क्ते ।

காகோபி ஜீவதி சிராச்ச பலிஞ்ச புங்க்தே ।

காகமென்று கூறப்பட்ட திர்யக் ஜாதியில் ஜனித்த ஒரு பறவையும் வெகுகாலம் ஜீவித்திருக்கிறது. ஒவ்வொருநாளும் பலியையும் புஜிக்கின்றது என்று பெரியார் மொழிந்திருப்பதால் நம சரீரசுகத்தை நாமும் பெரிதாகக் கருதினோமானல் அப்பறவைக்கும் நமக்கும் யாதொருவேற்றுமையுமேற்படாது. அதாவது சிறந்த மானிடப்பிறவிக்குற்ற பயன் ஒன்றுமில்லை என்று கருத்து. ஆகையால் ஸகல ஜனங்களும் ஒவ்வொருதினமும் தம்மாலியன்றவரையில் பரோபகாரத்தின்பொருட்டுத் தம் சரீர புத்தி முதலியவைகளையுபயோகப்படுத்தி ஜன்ம ஸாபல்யத்தை அடையவேண்டும்.

சுபம் !

உப-பத்திராதிபர்

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ அற்பசி-௴ உருவ

# ஹரிஹராபேதம்.

(595-வது பக்கத்தொடர்ச்சி)

இங்கு கூறப்பட்ட கதையால் மும்மூர்த்திகளிலும் கீழ் மேல் என்கிற பேதத்தைக் கூறுவது சரியல்ல. அம்மூன்றும் ஒரே மூர்த்திதான் என்று விளங்குகிறது.

பின்னும் ஸ்ரீ மஹாபாரதம் சந்திபர்வாவில்

यश्चते ह्यग्रतोयाति युद्धे संप्रत्युपस्थिते ।
तं रुद्रं विद्धि कौन्तेय देवदेवं कपर्दिनम् ।
निहतान् तेनैव पूर्वं हतवानसि वैरिपून् ॥

யஶ்சதே ஹ்யக்ரதோயாதி யுத்தே ஸம்ப்ரத்யுபஸ்திதே ।
தம் ருத்ரம் வித்தி கௌந்தேய தேவதேவம் கபர்திநம் ।
நிஹதாந் தேநைவ பூர்வம் ஹதவாநஸி வைரிபூந் ॥

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி ஹே அர்ஜுனா! யுத்தம நேர்ந்திருக்கும் இச்சமயத்தில் உனக்குமுன் யார் செல்லுகிறாரோ அவர்தான் தேவதேவரான ஜடையுடன்கூடிய ருத்திரர் என்று அறி. ஹே குந்திபுத்ர! முந்தி அவரால் கொல்லப்பட்டவர்களான சத்ருக்களை மறுபடியும் நீ அடித்து நீ கொன்றாய் என்கிற பெயரை அடைகிறாய், என்கிற இதினால் பரமேசுவரன் அடித்தாரென்று கிருஷ்ணபகவானே சொல்லிவிட்டும், பிறகு கீதையில் பகவானே

मयैवैते निहताः पूर्वमेव निमित्तमात्रं भव सव्यसाचिन् ।

மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந் ।

என்னாலேயே முந்தியே இவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஹே அர்ஜுனா. பெயருக்கு மாத்திரம் நீ இருந்துகொண்டிருப்போரும் என்று சொல்லியிருக்கிறார்.

இவரே மூர்த்தி பரமேசுவரனால் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியபிறகு என்னால் அடிக்கப்பட்டார்கள் என்று சொன்னால் இவ்விருவர்களுக்கும் பெயர்மாத்திரம் ருத்திரர், க்ருஷ்ணன் என்று மாறுதலேயன்றி ஸ்வரூபத்தில் பேதமில்லை இரண்டும் ஒரே மூர்த்திதான் என்று நன்கு விளங்கவில்லையா?

ஸ்காந்தபுராணத்தில் மாகமாஹாத்மியத்தில் 17-அத்தியாயத்தில்

तस्मान्मां त्वां विधातारं ये मूढाभेदबुद्धिना ।
पश्यन्ति नरकं यान्ति यावच्चन्द्रदिवाकरम् ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌧𑌾𑌤𑌾𑌰𑌂 𑌯𑍇 𑌮𑍂𑌢𑌾𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾 ।
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌰𑌕𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌮𑍍 ॥

என்னையும் சிருஷ்டிகர்த்தாவாகிய உம்மையும் எந்த மூடர்கள் பேதபுத்தியுடன் பார்க்கிறார்களோ அவர்கள் சந்திரஸூர்யர்கள் உள்ளவரையில் நரகமடைவார்கள் என்று ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பரமேசுவரரிடம் தெரிவித்திருக்கிறார்.

சேஷதர்மம் 13-வது அத்தியாயத்தில்

शङ्करं मां च सर्वेशं भेदबुद्धिविवर्जितः ।
यः पूजयेत् सदा भक्त्या कांक्षितं लोकमाप्नुयात् ॥
मद्भक्तश्शङ्करद्वेषी मद्द्वेषी शङ्करप्रियः ।
द्वाविमौ नरकं यातः यावच्चन्द्रदिवाकरम् ॥

𑌶𑌙𑍍𑌕𑌰𑌂 𑌮𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑌂 𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌯𑌃 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍 𑌸𑌦𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌲𑍋𑌕𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥
𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑌙𑍍𑌕𑌰𑌦𑍍𑌵𑍇𑌷𑍀 𑌮𑌦𑍍𑌦𑍍𑌵𑍇𑌷𑍀 𑌶𑌙𑍍𑌕𑌰𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌨𑌰𑌕𑌂 𑌯𑌾𑌤𑌃 𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌮𑍍 ॥

ஸர்வேசுவரரான சங்கரரையும் என்னையும் பேதபுத்தியைவிட்டு, பக்தியுடன் எப்பொழுதும் எவர்கள் பூஜிக்கிறார்களோ, அவர்கள் வைகுண்டமோ, அல்லது கைலாஸமோ, விரும்பிய லோகத்தை அடைகிறார்கள். சங்கரரிடத்தில் த்வேஷபுத்தியுடன்கூடிய என் பக்தனும் என்னிடம் த்வேஷம்கொண்ட சங்கரபக்தனும் ஸூர்யன் சந்திரன் உள்ளவரையில் நரகத்தில் வஸிக்கிறானென்று ஸ்ரீமஹாவிஷ்ணு கூறுகின்றார்.

உப-பத்திராதிபர்.

# வர்ணாசிரமதர்ம மஹாநாடு.

இவ்வாண்டு சென்னைமாநகரில் தேசிய காங்கிரஸ்மஹாஸபை ஆங்கிலவருஷ முடிவான டிஸம்பரில் நடைபெறுகிறது. அச்சமயம் வர்ணாசிரமதர்ம மஹாநாட்டைக் கூட்டவேண்டுமென்பது அடியேனது ஆசை. வர்ணாசிரமதர்மத்தில் பற்றுக்கொண்ட பல பெரியார்கள் உள்ளத்திலும் இவ்வெண்ணம் தோன்றுமலிராது. நிமித்தமாத்ரமாக இருப்பதற்கு அடியேனை ஆண்டவன் தூண்டினாரென எண்ணுகிறேன். இது நிறைவேற அடியேனையும் ஸ்ரீமான் P. கிருஷ்ணமாச்சாரி என்ற ஓர் மதாபிமானியையும் ஆரம்பகார்யதர்சிகளாக ஓர்ஸபை (இதற்கெனக் கூட்டப்பட்டது) நியமித்தது. எங்களைவிட எல்லாவகையிலும் பெரியோர் இதை ஆரம்பித்திருக்கவேண்டும். இப்போ தக்கவரைத்தேடி முன்னிறுத்த ப்ரயத்நம் செய்து வருகிறோம்.

இதைக் கூட்டவேண்டிய அவசியமுண்டா? கலிமஹிமையால் வர்ணஸங்கரம் ஏற்படுவது நிச்சயம். ஈசன் விருப்பப்படியே எல்லாம் நடக்கும், வரும் பிரவாகத்தை எதிர்ப்பது கடினம் எதிர்த்தாலும் அதற்கே பலத்தை அளிப்பதாகும். அபிமானமுள்ளோர் தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்வதே உத்தமம் என நினைப்பார் சிலருண்டு. ஓரளவு இஃதுண்மையே. இங்ஙனம் நினைத்துப் பேசாமலிருக்கக்கூடிய நிலைமையிலிருப்பவர் சிலரிருக்கலாம். ஆனல் பொது விஷயத்தில் மாத்திரம் இவ்வாய் வேதாந்தம்பேசித்தன்குடும்பபரணத்திற்கு அங்குமிங்கும் அலைந்து திரிப்வர் அவசியம் தர்மத்தையும் ஓர் குடும்ப அங்கமாக நினைத்து அதை ரக்ஷிக்கப் பாடுபடவேண்டும். கிருஹஸ்தன் தனது வருவாயில் இவ்வளவு பாகம் தர்மத்திற்குச் செலவிடவேண்டுமென விதி கூறுகிறது. குடும்பத்திலுள்ளவரை உற்றார் உறவினர் ஸமூஹம் இவைகளது உதவியைத் தேடாமலிருக்கமுடியாது. ஆதலால் எல்லாம் வல்ல இறைவன் இப்பணியில் நம்மையும் தூண்டாமலில்லை. தர்மத்தை நம்புகிறவர் அதை ரக்ஷிக்க அவசியம் முயற்சிக்கவேண்டும்.

அதற்காக ஏற்பட்ட தர்மஸ்தாபனமான ஸ்ரீ மடங்களும் ஸ்வதேச ராஜாக்களுமல்லவோ இதை ஆசரிக்கவேண்டும்? ஏழை

களான ஒரு சிலர் ஆரம்பிப்பது அழகா என வினவலாம். ஸரி யான க்ஷத்திரியர்களில்லாததால் அவர்களை எதிர்பார்ப்பதற்கில்லை. ஸ்ரீமடாதிபதிகளோ அவரவர் சக்திக்கேற்றபடி செய்யாமலில்லை. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தைப் பற்றியவரை யான் நன்கறி வேன். இச்சென்னையில் ஓர் கிளைமடம் ஸ்தாபித்து ஆதிபகவத் பாதாளது அழகிய விக்ரஹத்தை அர்ச்சித்து ப்ரதிதினம் மத விஷயமான உபன்யாஸங்களை நடத்தி எண்ணிறந்த ஜனங்கள் கேட்கும்படி செய்வதோடு புதிதமான "ஆர்யதர்மம்" என்ற இப்பத்திரிகையையும் நடாத்துகின்றது.

தற்சமயம் ஸ்ரீ பீடாதிபதிகளாக விளங்கும் ஸ்ரீமதாசாரி யாள் சென்றவிடமெல்லாம் அமிர்தத்தினுமினிய சொற்களால் கலியை விலக்கி கிருதயுகதர்மத்தை நிலைநாட்டுவது எல்லோரும் அறிந்தது அந்தந்தக் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி எவர் துவக்கினும் அதை அநுக்ரஹித்து ஆமோதிக்காமலில்லை. ஏழைகளிடமிருந்தே உண்மையான தத்வம் துவக்கப்படும். பண் டையகாலத்தில் இங்ஙனம் மஹாநாடு கூட்டப்பட்டதோ? இப் போது என்ன அவசியம் வந்துவிட்டது எனச் சிலர் கேட்கலாம். ஓர் யக்ஞம், உத்ஸவம், விவாஹம் முதலியவைகள் அப்போது மஹாநாட்டின் வேலையை முடித்துவந்தது. காலத்திற்கேற்க அதிலும் காந்தி தென்னாடு வந்தபிறகு அத்யவசியமாக இதைக் கூட்டியே ஆகவேண்டுமெனப் பலர் நினைக்கின்றனர்.

அன்றியும் காங்கிரஸ்ஸிற்கென பல ஆயிரக்கணக்கான ஜநங் களும் விசேஷமாகத் தென்னாட்டு ஜநங்களும் ஒன்றுசேருவதால் நமக்குப் பெரும் அநுகூலமுண்டு. ஸமயம் நேர்ந்தபோது காரி யத்தை ஸாதிப்பது அழகாகும். தனக்கெதிர்ப்பு இல்லையென காந்தியும் அவர் கோஷ்டியும் சீர்திருத்தக்காரர்களும் எக்காளம் போடுகின்றனர். அதற்குப்பலபத்திரிகைகள் ஒத்துவாசிக்கின்றன. ஸ்வராஜ்யமென்ற மோகத்தால் பல மதாபிமானிகள் மயங்கி காங் கிரஸ்ஸிலீடுபட்டு காந்திவாக்கைவேதமாகநினைத்திருந்தனர். வேசி வீட்டையும் ஈசாலயத்தையும்ஒப்பிட்டும் பிராமணர்களைப் பறைய னல்லது பருகன் எனவும், விதவாவிவாஹம், சிராத்தம் விடல், மநுஸ்ம்ருதி ஊழலுள்ளது எனவும் காந்தி கூறியபிறகு பலர் விழித்திருப்பர். காங்கிரஸ்ஸுக்குத் தலைமைவஹித்த ஸ்ரீமான் சேலம் விஜயராகவாசாரியார் போன்றவர்கள் மறுப்பெழுதத்

துவக்கினர். இதிலும் வர்ணாச்ரமஸபைகூட என்ன அவசியம்? என்ன பலம் தேவை?

ஏற்கனவே பல நிதிகளின் பெயரைக்கூறி ஏழை தக்ஷிண தேசத்தில் மழையில்லாப் பஞ்சகாலத்தில் கூடுமானவரை பணத்தைப் பலர் சுரண்டிச் சென்றனர் செல்கின்றனர். ஆதலால் படாடோபச் செலவு செய்து பிக்ஷைக்குக் கிளம்புவது உசிதமாகாதாதலால் குறைந்த செலவில் நடத்த உத்தேசம். காங்கிரஸ் உபசரணைக் தலைவருக்குக் கடிதம் எழுதி அங்கேயே இடம் கேட்டிருக்கிறோம். சுலபமாகக்கிடைத்தால் அங்கேயே நடத்தலாம். அல்லது வேரிடத்திலாவது நடக்கும்போது அதன் விரோதிகள் தங்களாலான இடஞ்சல்கள் செய்யாமலிரார். அதைப்பொறுத்தே இதை நிலை நாட்டவேண்டும். அன்றியும் காங்கிரஸிலுள்ள பல மதாபிமானிகளைக்கொண்டு பொது ஸ்தாபனமான அதில் ஹிந்து மத விஷயமான தீண்டாமை முதலியவைகளைக் கொண்டு வாராமல் தடுக்கும்படி ஓர் தீர்மானம் கொண்டுவர ப்ரயத்னம் செய்கிறோம். இந்த விஷயத்தை ஒவ்வொரு கிராமத்திலும் கூடி ஆமோதித்துக் காங்கிரஸ்ஸிற்குக் கட்டளையிடவேண்டும்.

ஒவ்வொரு வர்ணாச்ரமியும் இச்சபைக்கு வரவேண்டும். வரமுடியாதவர் அவரவர் கிராமத்தில் ஓர் சபை கூட்டி வர்ணாசிரம தர்மத்தின் மேன்மையையும், அதில் நமக்குள்ள பக்தியையும் விளக்கி மதவிஷயங்களை அரசாங்கத்திலும் காங்கிரஸிலும் கொண்டு வருவதைக்கண்டித்துப்பத்திரிகைகளுக்கும் அரசாங்கத்திற்கும் காங்கிரஸிற்கும் ஸமாசாரம் அனுப்பவேண்டும் இல்லையேல் விவாஹவயது சட்டம் போல் இனி ஸந்தியை செய்யக்கூடாது. சிராத்தம் செய்யக்கூடாது. என பல சட்டம் செய்ய ஆரம்பிப்பர். மனுதர்ம சாஸ்திரத்தை அதர்ம சாஸ்திரமெனவும், அதை அரசாங்கத்தார் எறித்துச் சாம்பலாக்கி ஸமுத்திரத்தில் எறியவேண்டும் எனவும் தீர்மானம் செய்து ஓர் பஞ்சமக்கூட்டத்தால் அரசாங்கத்திற்கு அநுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு வைதிகஸமூகம் என்ன பதில் சொல்லப்போகிறது?

ஆதலால் ஒவ்வொரு ஆர்யமதாபிமானியும் விசேஷமாக ஆர்ய தர்ம சந்தாதாரரும் இதில் ஈடுபடவேண்டும். நமது தனம் நமது மதத்தை நமது கௌரவத்தை அழிக்கத்தக்க எத்தனை இயக்கங்களுக்கு உதவுகிறது கவனியுங்கள். கீழ் சொன்னபடியே செல

வைக் குறைத்து அதிவிமரிசையாக மஹாஸபை நடத்தவே தீர்மானம். ஆர்யதர்மமும் பிராமணபேபரும் தவிற மற்றப் பத்திரிகை ஸஹாயமில்லை. ஏராளமாகப் பணமளிப்பவரில்லை. மதாபிமானிகள் மநம்நொந்து எல்லாம் ஈசன்செயல் எனக் கிராமத்திலே இருந்துவிட்டால் இது எப்படி நடக்கும். ஆனதால் ஒவ்வொரு சந்தாதாரரும் தனக்கும் பாகமிருப்பதற்காகக்குறைந்தது நாலணுவேனும் ஓரணுவேனும் கவரில் ஸ்டாம்பாக வைத்து 154-தம்பு செட்டிவீதியென்ற விலாஸத்துக்கனுப்பித்தனது அபிமானத்தைக் காட்டவேண்டும். இது ஓர் பெரும் தியாகமல்ல, தங்களபிமானத்திற்கு அடையாளமாகவே இதை வர்ணாசிரமத்தின் பேரால் கேட்கிறோம். ஆங்காங்குகூட்டம்கூடி பணவசூல் செய்தனுப்ப வேண்டுமென யாசிப்பது எவ்வளவுபயனளிக்குமென அறிவேன்.

ஆகையால்தான் ஒவ்வொருவருக்கும் ஸாத்தியமான இச் சிறு உதவியை கேட்கிறேன். தற்காலம் பொதுவாக ஆர்யதர்மமும் விசேஷமாகப் பிராமணதர்மமும் படும்பாட்டிற்கு லோகமும் அல்லது மதப்பற்றுள்ளவர். எல்லாத் தியாகத்திற்கும் துணிந்து முன்வரவேண்டும். ஒரு சிலரே மநம் ஒடிந்துக் கதறிக்கதறி அழுகின்றனர். இன்னும ஸமூஹம் உறங்குகிறது. கும்பகர்ணனுக்கும் ஒரு ஸமயம் விழிப்புண்டு. நம் ஸமூஹம் எப்போது எழுந்திருக்குமோ? ஈசா! நீயே கருணை புரிந்து உள்ளே புகுந்து எழுப்பி முன்னே நிறுத்துவாய், உன்னடி வாழ்க! உமது ஆணை வாழ்க! வர்ணாசிரம தர்மம் வாழ்க! தீமை வீழ்க!

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவ சர்மா.

---

## காந்தியடிகள் கூறும் விதவாமறுவிவாகத்திற்கு வங்காளப்பள்ளி ஆசாரியரின் மறுப்பும், அதற்கு காந்தியவர்கள் தமது "யங் இந்தியா" வில் கூறும் சமாதானம் சரியல்லவென்பதும்.

(623-வது பக்கத்தொடர்ச்சி)

நமது சனாதனதர்மமெனும் கற்பகத்திற்கு அவ்வக்காலங்களில் நிகழ்வுற்ற இன்னல்களைற்றூண்டி இககணபரியந்தம் அவ்வாசாரமும், பிரும்மசரியவிரதானுஷ்டானமும் விதவைகளிடத்து

588



நிலைத்து நிற்கின்றதென்பதே அனுபவத்தில் நம்பத்தகுந்ததோர் ஆதாரமாயிருக்க எமது காந்தியடிகள் மற்றும் எத்தகைய அனுபவசித்தமான ஆதாரத்தை நம்புவார்களோ எமக்குத்தெரியவில்லை.

இது நிற்க காந்தியவர்கள் சொல்லும் வார்த்தைகள் யுக்தி வாதத்திற்கும் ஒற்றதாகப் புலப்படவில்லை. இதுவும் மிகப்பிரபல ஆங்கில தத்துவசாஸ்திரியான "மால்தஸ்" ("Malthus") என்பவர் உலகின்கண் ஜனத்தொகையின் அமைப்பைப் பற்றி கூறியுள்ளதை நோக்குங்கால் நன்கு புலப்படும். அன்னார் ஜனசமூகத்தைப் பற்றியாராய்ச்சி செய்யுமிடத்து, அது அதிவேகமாய்ப் பெருகிவருகிறதென்றும், இன்னும் சிற்சில நூற்றாண்டுகளில் ஜீவனோபாயமே மிகுந்த கஷ்டமாய்விடுமென்றும் எழுதியிருக்கின்றார். இச்சித்தாந்தமே இதுகாறும் உடைபடாது பொருளாதார நிலைமையைப்பற்றிக் கூறவெழுந்த ஆங்கில நூற்களில் (Works on English Political Economy) "மால்தாஸின் ஜனசங்கியையைப்பற்றிய கொள்கை" (Malthusian Theory of Population) யெனப் பல்லோராலும் கையாளப்பட்டு வருகின்றது. அன்றியும் இத்தகைய ஜனசமூகத்தின் பெருக்கிற்கும் ஓர்வித தடை இன்றியமையாததெனவும் அவ்வாங்கில தத்துவசாஸ்திரியார் அபிப்பிராயப்பட்டிருப்பதாகத்தெரியவருகின்றது. (இதுவே ஆங்கிலத்தில் "Malthusian theory of Restraint" என விவகரிக்கப்படும்) இதை வெகு நாட்களுக்கு முந்தியேயறிந்த எமது பிராசீன முனிவர்கள், ஓர் தரம் விவாகம் செய்யப்பட்டும் தனது துரதிருஷ்டவசத்தால் பதியையிழந்த விதவைகள் மறுமணம் செய்துகொள்வது தகாதென விதித்து, நமது இந்து ஜனசமூகத்தின் தொகை கட்டிலடங்காது பெருகாமலிருக்கவேண்டி இவ்வைதவ்யமெனும் தடைரூபமான அரும்பெரும் பிரும்மசரிய விரதத்தை விதித்தோதியது. அதுவுமன்றி, இல்லற நடாத்திலிருப்பவர்களுக்குக் கூட இப்பிரும்மசரிய விரதம் விதிக்கப்பட்டிருக்கின்றதெனலாம். எங்ஙனமெனில், முதன்முதலில் ஒருவனுக்குண்டாகும் புத்திரனே தர்மத்தைப் பரிபாலிக்கவேண்டி ஏற்படும் ஸந்ததி (धर्मज:) [illegible] யெனவும் அதன்பிறகு உண்டாகும் ஸந்ததிகள் காம்யார்த்தமெனவும் நமது மத நூற்கள் கூறி நிற்பதைக் காண்க. ஈண்டு 'தர்மத்தைப் பரிபாலிக்கவேண்டி' யெனச்

சொல்லியிருப்பது 'புத்' என்னும் கொடிய நாகத்திலிருந்து காப்பாற்றுபவன்

पुन्नाम्नः नरकात् त्रायत इति पुत्रः

புந்நாம்ந꞉ நரகாத் த்ராயத இதி புத்ர꞉

என்று பொருட்படுத்தப்பட்டுள்ளது. அஃதாவது மனு, யாக்ஞவல்கியர், வசிஷ்டர், வாமதேவாதிகளான நமது முன்னோர்களின் வம்சம் நசித்துப்போகாமலும், அதனால் நமது இந்துஜன சமூகம் க்ஷீணித்துப் போகாமலும், உத்தாரணம் செய்தற்கென ஏற்படும் சந்ததியானதால் 'தர்மார்த்தம்' எனக் கொள்ளற்பாலது. (இது ஆங்கிலத்தில் Maintenance of the purity of the Race என்றும் 'Surrival of the Race' என்றும் விவகரிக்கப்படும்.) பின்பு உண்டாகும் ஸந்ததிகள் 'காம்யார்த்தம்' என்று கூறுவதால் அதன் பின்பு இல்லறநடாத்திலுள்ள தம்பதிகள் தங்கள் ஜன்மம் கடைத்தேறுவதற்குற்ற சாதனங்களைத் தேடிக்கொள்வதிலேயே தங்கள் நாட்டத்தைச் செலுத்த வேண்டுமென்பது கருத்து. ஆகவே, நமது முன்னோர்களின் வம்ச பரம்பரையும் நசிக்காமலிருக்க வேண்டி இல்லற தர்மத்தை விதித்துள்ள பெரியோர் நமது ஜனத்துகை அபரிமிதமாக வதிகரிக்காமலிருப்பதற்குற்ற சாஸ்திரரூபமான சட்டதிட்டங்களையுஞ் செய்து முடித்தனர். இவ்விதமிருக்கையிலேயே, சற்றேறக்குறைய முப்பத்தைந்துகோடியெனக் கணக்கிடப்படும். நமது இந்து ஜனங்களுள் மூன்றில் ஒரு பகுதியாரில் பலர் ஒரு வேளை உணவிற்கும் வழியின்றித் தத்தளிக்கின்றார்களென மனங்கசிந்து அவர்கள் பசிப்பிணியைநீக்குவதற்காக எமது மகாத்மா கதர் பிரசாரஞ் செய்து வருவது ஓர்புறமிருக்க, இந்து சனாதனதர்மத்திற்கும் சாஸ்திரக் கொள்கைகளுக்கும், யுக்திக்கும் ஒரு சிறிதும் ஒவ்வாத இவ்விதவா மறுவிவாக விஷயத்தில் ஸாகஸத்துடன் தலையிடுவது நமது தேயத்தின் வறுமைப் பிணியை அதிகப்படுத்துவதற்கோ மற்ற யாது காரணம் கொண்டோ யாம் அறிகிலோம்!

(தொடரும்)

ப, வ, கணபதிசாஸ்திரி,

---

## ரிக்வேதபாராயணம்.

मायूरेशाभयांबेश वदान्य परमेश्वर ।
जपेन्नामत्रयं नित्यं पुनर्जन्म न विद्यते ॥
भक्तानुकंपे मुनिभाग्यलक्ष्मी नित्ये जगन्मङ्गळदानशीले ।
निरञ्जने दक्षिणदेशगङ्गे कावेरि कावेरि मम प्रसीद ॥
साक्षान्मूलप्रमाणाय विष्णोरमिततेजसे ।
आद्याय सर्ववेदानां ऋग्वेदाय नमोनमः ॥

𑌮𑌾𑌯𑍂𑌰𑍇𑌶𑌾𑌭𑌯𑌾𑌂𑌬𑍇𑌶 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 ।
𑌜𑌪𑍇𑌨𑍍𑌨𑌾𑌮𑌤𑍍𑌰𑌯𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌕𑌂𑌪𑍇 𑌮𑍁𑌨𑌿𑌭𑌾𑌗𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇 𑌜𑌗𑌨𑍍𑌮𑌙𑍍𑌗𑌳𑌦𑌾𑌨𑌶𑍀𑌲𑍇 ।
𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌦𑍇𑌶𑌗𑌙𑍍𑌗𑍇 𑌕𑌾𑌵𑍇𑌰𑌿 𑌕𑌾𑌵𑍇𑌰𑌿 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 ॥
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌮𑍂𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑍇 ।
𑌆𑌦𑍍𑌯𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌾𑌯 𑌨𑌮𑍋𑌨𑌮𑌃 ॥

சுருதியில் தேவதைகள் எவ்வளவு பெயர்களிருக்கின்றார்களோ அவர்களனைவரும் வேதமறிந்தபிராமணர்களிடம் வஸிக்கிறார்கள். ஆகையால் வேதத்தையறிந்த பிராமணர்களையும்பொருட்டு ஒவ்வொருநாளும் நமஸ்காரம் செய்யவேண்டும். அமங்களவார்த்தையைச் சொல்லக்கூடாது. இவ்விதம் செய்வதால் சகலதேவதைகளும் பிரீதியடைகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆதியில் பிர்மதேவர் இந்த க்ஷேத்திரத்தில் ஸ்வயம்பூலிங்கத்தைப் பூஜித்து தபஸ்செய்து ஈச்வரானுக்கிரகத்தால் சிருஷ்டி ஸாமார்த்தியத்தையடைந்ததால் இந்த லிங்கததிற்குப்பிர்ம்மலிங்கமென்றும் க்ஷேத்திரத்திற்குப்பிர்ம்மவனமென்றும் விளங்கிவருகிறது.

பிறகு ஒருஸமயம் பார்வதி பர்த்தாவினுடைய வாக்கிய உல்லங்கனத்தால் தக்ஷயாகத்தில் சரீரம் விடும்படி ஏற்பட்டு பக்ஷிஜாதியாகிய மயில் ஸ்வரூபம் வந்து அதை நிவர்த்திசெய்ய பரமேச்வரர் ஆக்ஞையால் இந்தக்ஷேத்ரம் வந்துசேர்ந்தாள். இங்கு வந்து காவேரியில் ஸ்நானம்செய்து பிர்ம்மலிங்க்த்தைப் பூஜித்து ஆகாயத்தில் கந்தர்வர்கள் அப்ஸரஸ்கள் தேவர்கள்முதலிய தேவகணங்கள் கானம்செய்யும்போது தனக்குஸகாயமாய் மயில்ரூபத்

துடன் வந்த விஷ்ணு முதலான தேவர்களுடன் நர்த்தனஞ்செய்துகொண்டு பிரதக்ஷிணநமஸ்காரத்தையும் செய்தாள். அப்பால் ஈச்வரதியானத்துடன் தவம் செய்ததினுல் மயில்ரூபம்மாறி பூர்வரூபத்தைப் பெற்று பகவானை விவாஹம் செய்துகொண்டு அவரது பக்கத்தில் விளங்கிவருகிறுள். இந்த ஐதிஹ்யமே உத்ஸவரூபமாய் நடைபெற்றுவருகிறது. இதனுல்தான் இந்த க்ஷேத்திரத்திற்கு கௌரீமாயூரம் என்றும் பிர்ம்மலிங்கத்திற்கு மாயூரநாதர் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது.

ஒருஸமயம் நந்திகேச்வரர் ஸர்வலோகத்திற்கும் ஆதாரமாயிருக்கிற ஸ்ரீபரமேச்வரனை நாம் வஹிப்பதால் அந்தபகவானுக்கு நாம்தான் ஆதாரமென்று ரஜோகுணத்தின் மேலீட்டால் கெர்வமடைந்தார். இதையறிந்த பகவான் நந்தியின்மேலேறி லோகஸஞ்சாரம் செய்யுங்கால் தனது கரிமாவென்ற அதிகபாரமுள்ள சக்தியால் அமுழ்த்தினுர். அந்தஸமயத்தில் பகவானை வஹிக்க முடியாமல் கண் புதிங்கி மூச்சுத்திணறி பரமதுக்கத்தையடைந்த நந்திகேச்வரர் தன் கர்வத்தைவிட்டு தான் நினைத்த அபராதத்தை பகவானிடம் தெரிவித்து ருத்ராத்யயனம் முதலிய வேதமந்திரங்களால் பன்முறை ஜபித்து பகவானைப் பிரார்த்தித்தார். உடனே பகவானுக்கு நந்தியிடம் கருணைவந்து "நீ அவிவேகத்தால் கர்வமடைந்தபடியால் பூலோகத்தில் கிழக்கு ஸமுத்திரத்திற்கு அருகாமையிலுள்ள பிர்ம்மவனம் சென்று காவேரியில் ஸ்நானம் செய்து மேற்குமுகமாய் ஞானசக்தியுடன் ஸகலமான தேவரிஷிகளுக்கும் தத்வோபதேசம் செய்து ஸகல இஷ்டங்களையுமளித்து லிங்கரூபமாய் ஜ்வலிக்கும் என்னையும் பூஜித்துவரவேண்டும். அவ்விதம் செய்தால் உன் அக்ஞானம் நிவர்த்தியாகிச் சிறந்த தத்வஞானத்தைப்பெற்று முன்போல என்னை சுலபமாய் வகிக்கலாமென்று ஆக்ஞாபித்தார். அவரது ஆக்ஞையைச் சிரமேற்றுங்கி அவ்விதமே அந்த க்ஷேத்திரத்தையடைந்து ஒவ்வொரு தினமும் காவேரியில் ஸ்நானஞ்செய்துகொண்டு லிங்கத்தைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து,பூஜித்துத்தவம் செய்துவந்தார். இவரது ஆராதனத்தால் கருணைகொண்ட பகவான் தக்ஷிணமூர்த்தியாய்த்தோன்றி நந்திக்குத் தத்வோபதேசம்செய்து புனிதமான காவேரி தீர்த்தத்திற்கு 'விருஷபதீர்த்தம்' என்று திருநாமம்கொடுத்து அதில் ஸ்நானம் செய்வோர்களுக்கு எண்பது கிருச்ரபலம் உண்டாகட்டு

மென்றும் அநுக்ரகித்தார். ஸகலமான வேதங்கள் ஆகமங்கள் தேவர்கள் ரிஷிகள் முதலானவர்களும் தம்தம் பெயரால் தீர்த்தங்களை ஏற்படுத்திக்கொண்டு காவேரிதீர்த்தத்தால் நந்திக்கு அபிஷேக பூஜாதிகளைச் செய்து தம்தம் இஷ்டஸித்திகளை அடைந்தார்கள். அதுமுதல் காவேரிக்கு ரிஷபதீர்த்தம் என்றும் வடகரையில் விளங்கும் லிங்கத்திற்கு வதானிய பரமேச்வரர் என்றும் சக்திக்கு ஞானம்பாள் என்றும் தக்ஷிணாமூர்த்தியும் பிரஸித்தமாய் விளங்கிவருகிறார்கள்.

ஒருஸமயம் ஸோமகாஸுரன் என்ற ஓர் அஸுரன் தனக்கு இருக்கும் சப்தகிருகணசக்தியால் வேதங்களையும் அவைகளுக்கு அதிஷ்டாதாவான வேதபுருஷர்களையும் அபகரித்துக்கொண்டு ஸமுத்திரத்தில்மூழ்கி பாதாளத்திற்குப்போய்விட்டான். உலகில் வேதங்கள் இல்லாமல் கர்மாநுஷ்டானங்களும் நின்றுவிட்டன. ஸகலரும் கஷ்டப்படுவதைப்பார்த்து நாரதமகரிஷி தந்திரங்களால் கர்மானுஷ்டானங்கள் செய்து பகவானை உபாஸிக்கும்படி எல்லோருக்கும் ஐந்து தினத்தில் தந்திரங்களை உபதேசித்தார். ஆகையால் ஷை தந்திரங்களுக்கு 'பாஞ்சராத்ர'மென்று பெயர் ஏற்பட்டது. பிறகு ஸகல தேவாதிகளின் பிரார்த்தனையால் பகவான் மத்ஸ்யாவதாரம் செய்து ஷை அசுரனை ஸம்ஹரித்து வேதோத்தாரணம்செய்து லோகத்தை ரக்ஷித்தார். வேதங்கள் சிலகாலம் ஸமுத்திரமத்தியில் இருந்ததினால் துர்க்கந்தம் ஏற்பட்டது ஷை வேதங்களின் துர்க்கந்தத்தை மஹரிஷிகள் ஸஹிக்கமுடியாமல் பரம ஜுகுப்ஸையுடன் கிரஹித்தார்கள். அதைக்கண்ட வேதங்கள் தம்தம் ரூபத்துடன் இந்த க்ஷேத்திரம் வந்து காவேரியில் ஸ்நானம்செய்து வடகரையில் புண்டரீகவல்லியுடன் ஸ்ரீரங்கநாதரைப் பூஜா பிரதக்ஷிணஸ்தோத்திராதிகளால் ஆராதித்துத் தங்களுக்கு ஏற்பட்ட துர்க்கந்தம் நிவர்த்தியானதால் பகவானுக்குப் பரிமளரங்கநாதர் என்றும் காவேரிக்கு வேதாமோததீர்த்தமென்றும் க்ஷேத்திரத்திற்கு ஸுகந்தவனம்என்றும் வேதங்களால் பிரஸித்தியேற்பட்டது.(இதற்குதிருவிழந்தூர்என்றும் பெயருண்டு.)

இந்த மாயூர க்ஷேத்ரமானது சிவாலய விஷ்ணு ஆலயாதிகளுடன் கூடிக் காவேரி மஹிமையோடு சர்வோத்தமமாய் விளங்குகிறபடியால் இந்த இடத்தில் காருண்யமூர்த்தியாகிற ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதியவர்கள் இந்தக் குரூரமான

கலியின் கொடுமையால் பிராமணர்களுக்கு வேதசக்தி குறைந்து வருவதை உத்தேசித்து அது குறையாமல் விருத்திக்கு வரவேணுமென்கிற அபிப்ராயத்தால் ஆரம்பத்தில் சக்திஸ்வரூபமாயும், ஆதிவேதமுமாயிருக்கிற ரிக்வேதத்தை வேதோக்தக்கிரமமாகவே நியமாத்யயனம்செய்து வேதசக்தியை விருத்திசெய்துகொள்ளும் படி மாணவர்களுக்கு நியமாத்யயன பாடசாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள், பாடசாலையில் பிர்மசர்ய விரதத்துடன் ரிக்வேதம் 8 அஷ்டகத்தை ஸாங்கமாய் அத்யயனம் செய்துவருவதில் சில மாணவர்களுக்கு இவ்வருஷம் பூர்த்தியாகியிருக்கிறது.

அனாதியான அவித்யாவாஸனையால் ஸம்சாரமார்க்கத்தில் வெகு விசித்ரமான கர்ம கதிகளுக்குத் தக்கபடி அநேக வசிக்கிர யோனிகளில் ஜன்மங்கள் ஏற்பட்டு ஏதோ ஓர் புண்யவிசேஷத்தால் இந்தக் கர்மபூமியில் உத்தமமான மானிடஜன்மம் கிடைத்து பூர்வகர்மவியாபகத்தால் உண்டான தாபத்திரயங்களை நிவிருத்தி செய்துகொள்வதற்காக வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிற இஷ்டப்பிராப்தி அநிஷ்டபரிஹாரங்களை நன்றாய் ஆராய்ந்துதெளிந்துகொண்டு ஸாதனங்களான ஸகல வேதோக்த கர்மங்களை விதியாய் நடத்த இந்த குரூரமான கலியில் விக்னப்ரதிபந்தத்தால் நிறைவேற்ற மிகவும் சிரமமாக இருப்பதால் வேதமே கருணையால் எந்தெந்த யக்ஞீய மந்திரங்கள் பாராயணம் செய்யப்படுகின்றனவோ அந்தப் பாராயணத்தாலேயே இஷ்டஸித்தி அநிஷ்டபரிஹாரங்கள் அடைந்து நித்யாநந்தசுகம் அடைவார்களென்று சொல்லியிருப்பதால் இந்த பூமண்டலத்தில் ஸர்வோத்தமமான ஜீவன் முக்தி க்ஷேத்திரமாகிய மாயூரக்ஷேத்திரத்தில் ஸகல ஜீவகோடிகளுடைய பாபங்களை நிவிர்த்தி செய்து ஸர்வாபீஷ்டப் பிரதயாய் 66 கோடி தீர்த்தங்களுடன்கூடிய காவேரியின் விருஷப தீர்த்தக் கட்டத்தில் நாளது ப்ரபவ-ஹு துலா-மீ 21௳ முதல் 30௳ வரையில் நடந்துவருகிற கௌரீமாயூரநாதஸ்வாமியின் துலாகாவேரி மஹோத்ஸவத்தில் ரிக்வேதபாராயணம் நடத்தி ஈசுவரார்ப்பணம் செய்யவேணுமென்கிற அபிப்ராயத்தால் வெகு வர்ஷங்களாக எங்கள் முன்னோர்களாலும், எங்களாலும் விதிப்படி ஸங்கல்பம் புண்யாகவாசனம் நாந்தி ருத்விக்வரணம் முதலானவைகளோடு ரிக்வேதபாராயணம் நடத்திக்கொண்டுவருகிறபடி நாளது ப்ரபவ-ஹு துலா-மீ 21௳ முதல் 30௳ வரையில் மேலே

கண்ட நியமாத்யயன பாடசாலை மாணவர்கள் ஸகிதம் வித்வத் சிரோமணிகளான வேதப்பிராமணர்களைக்கொண்டும் ஸ்ரீஜகத்குரு வின் அநுக்ரஹத்தால் ஸ்வஸ்திவாசனம், கிரமம், ஸம்ஹிதா, இரண்டும் நடக்கிறபடியால் பிராமணோத்தமர்களின் சந்தர்ப்பணை, ஸம்பாவனை முதலானவைகளை தேவப்பிராமண பக்தசிரோமணி களான தர்மாபிமானிகள் இவ்விடம் முன்னதாகவே வந்திருந்து, விமரிசையாய் நடத்திப் பூர்த்திசெய்து ஈசுவரஸ்வரூபிகளான வேதப்பிராமணர்களுடைய அநுக்ரஹத்தையடைந்து நித்யாநந்த பரிதர்களாக ஆகவேணுமென்று பிரார்த்திக்கிறோம்.

திருவிழந்தூர் } ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகளவர்கள்
மாயவரம். } ஸ்ரீமடம் மாஜி. ஸர்வாதிகாரி ராமஸ்வாமிசாஸ்திரி
ஷியார் அநுஜன் நியமாத்யயன பாடசாலை உபாத்தியாயர்
கிருஷ்ணசாஸ்திரி.

---

# ஆபஸ்தம்பகிருஹ்யஸூத்ரவிசாரம்.

கிருஷ்ணயஜுச்சாகைக்கு கிருஹ்ய கர்மாக்களை அனுஷ்டிப் பதற்கு போதாயனர் முதலான ஆறு மஹர்ஷிகள் "க்ருஹ்ய" கிருஹ்யஸூத்திரங்களை இயற்றினர், அவைகளான போதாய னம், ஸத்யாஷாடம், பாரத்வாஜம், ஆபஸ்தம்பம், வைகானஸம், ஆக்னிவேச்யம், இவைகள் இவைகளில் ஒன்றையியற்றிவரும் ஸ்மிருதிகர்த்தாக்களில் ஒருவரும், தபோமஹிமையதிகமாயுடைய வரும் தாம் சொல்லும் ஸூத்திரங்களில் அதிகம் விஸ்தாரம், சுருக்கம் இல்லாமல் சமத்காரமாய் கூறுபவரும் நமது ஸூத்திரப் பிரவர்த்தகருமான ஆபஸ்தம்பருடைய கிருஹ்ய ஸூத்திரத்தை என் சிறிய மதியளவு விசாரம் செய்யப்புகுந்தது ஸாஹஸமா யினும் இதைக் கண்ணுற்றசான்றோர் விசேஷமாய் தெரிவிப்பர் என்று இதை எழுதத்துணிந்தேன்.

கிருஷ்ண யஜுர்வேதத்தை द्व्यशीति த்வ்யசீதி அதாவது எண்பத்திரண்டு என்று பிரச்னாத்மகமாக சொல்லுவார்கள். अशीतिद्वयं அசீதித்வயம் என்பது 160 என்று அறியார்களுடைய பரிபாஷை. உபநிஷத்பாகத்திலுள்ள ஆனந்தவல்லீ பிருகுவல்லீ இவைகளை சிக்ஷாவல்லியுடன் ஒரே ப்ரச்னமாய்க் கூறும் சார் பார்கள் एकाग्निकाण्डं என்கிற மந்த்ரப்ரச்னத்தையும் சேர்த்துக் கணக்கிடுவார்கள். மற்றோர் பிரிவர் ஏகாக்னி காண்டம் வேறு.

त्रेताग्निकाण्डमू வேறு என்று கூறிச் சிரௌதபாகங்கள் மந்த்ரப் பிராம்மண ரூபமாயுள்ள வேதபாகத்தால் கூறியிருப்பதாலும், ஸ்மார்த்த கர்மாக்களும், யாகத்தில் அதிகாரம் பெறப்போகிற புருஷனுடைய சரீரசுத்தியுண்டாக்கக்கூடிய ஸம்ஸ்கார ரூபங்களாயுமுள்ளகர்மாக்களைச்செய்யக்கூடிய மந்திரங்களை மந்திரபிரச்னத்தில்கூறியிருப்பதாலும் தனியென்னும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தைத்திரீயாரண்யகம் இரண்டாம் பிரச்னத்தில் "எவ்வளவு தேவதைகளுண்டோ அவ்வளவு தேவதைகளும் வேதவித்தான பிராம்மணனிடத்தில் வஸிக்கின்றனர். ஆகையால் வேதமறிந்த மறையோர்களை ஒவ்வொரு நாளும் வந்தனம் புரியவேண்டும். அவர்கள் அமங்களவாக்கையுச்சரிக்கக்கூடாது. அவர்கள் திருப்தியடைந்தால் மற்றெல்லா தேவதைகளும் சந்தோஷமடைகிறார்கள்" என்று கூறுகிறது. பின்னும் இவர்கள் பிறப்பினாலும் வேதோக்த ஸம்ஸ்காரங்களாலும மேன்மேலும் பெருமையைப் பெறுகிறார்கள். அவ்வித ஸம்ஸ்காரமில்லாதவர்களை "व्रात्याः" "வ்ராத்யாঃ" விராத்யத்வமில்லாமைக்கும், பிராம்மண்யம் சிறப்படைவதற்கும் கௌதமரிஷியால் நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நாற்பதில் பத்தொன்பது பிராம்ம ஸம்ஸ்காரங்கள் இருபத்தொன்று தைவ ஸம்ஸ்காரங்கள் இந்த இரண்டுவித ஸம்ஸ்காரங்களினாலும் பிராம்மண்யம் ஓங்கி வளர்கிறது. ஸம்ஸ்கார அவச்யததை போதாயனர்

" ना क्रियो ब्राह्मण:, ना संस्कारो द्विज:, ना विद्वान् विप्र:, नतैर्हीनश्श्रोत्रिय:, ना श्रोत्रियस्य यज्ञ: इति। நாக்ரியோ ப்ராஹ்மணঃ நா ஸம்ஸ்காரோ த்விஜঃ, நா வித்வாந் விப்ரঃ; நதைர்ஹீநঃ ச்ரோத்ரியঃ, நா ச்ரோத்ரியஸ்ய யஜ்ஞঃ இதி। "

இதின் தாத்பர்யமாவது கர்மாநுஷ்டானம் இல்லாதவனை பிராமணனென்று சொல்லுவது, வைதிகஸம்ஸ்காரமில்லாதவனை த்விஜன் என்று சொல்லுவது, வித்தையில்லாதவனை விப்ரன என்று சொல்லுவதும், இம்மூன்றுமில்லாதவனை ச்ரோத்திரியன் என்று சொல்லுவதும் பொருந்தாது. சுரோத்திரியனில்லாதவனுக்கு யக்ஞத்தில் அதிகாரமில்லை என்று அபிப்பிராயப்படுகிறார்.

ஆகையால் பிராம்மண்யத்துக்கும் பரலோகத்துக்கும்,

कार्यश्शरीसंस्कार: पावन: प्रेत्यचेह च।

காயঃ ச்ரீரஸம்ஸ்காரঃ பாவநঃ ப்ரேத்யசேஹ ச।

"பரிசுத்தம் செய்கிற ஸம்ஸ்காரம் இரண்டுலகிலும் பயனளிக்கு மாகையால் அவச்யம் செய்யவேண்டியது" என்றிருப்பதால் இப்பொழுதும் பிராமணர்கள் அகாலத்திலேனும் செய்ய மறுக்கின்றனரில்லை. இவ்விதஸம்ஸ்காரங்களை ஆபஸ்தம்ப மஹர்ஷி சொல்லுவதற்காக அதற்குத்தகுந்த மந்த்ரபாகங்களை முதன்முதல் தர்சனம் செய்தார். அதாவது தபோமஹிமையால் ஈச்வரனால் அனுக்ஞை செய்யப்பட்டு அறிந்தார். இதைத்தான் ஏகாக்னி காண்டம், (ஔபாஸநாக்னியிலோ, லௌகிகாக்னியிலோ செய்வதால்) என்பார். இது இரண்டு ப்ரச்னம். முதல் ப்ரச்னம் 18 கண்டம் இரண்டாவது ப்ரச்னம் 22 கண்டம். இதில் கண்ட மந்திரங்களால் இன்னவைகள் செய்கிறது என்பதற்காக மறுபடி "க்ருஹ்யஸூத்ரமியற்றினார். இது 23 கண்டாத்மகமாயுள்ளது. இதற்கு கபர்தி என்பவரால் பாஷ்யமியற்றப்பட்டு ரிஷியின் கருத்தை வெளியிடப்பட்டிருக்கிறது. பிறகு ஸுதர்சனாசார்யர் என்பவரால் எட்டுப் படலாத்மகமாய் தாத்பர்ய தர்சனம் என்று வ்யாக்யானம் எழுதப்பட்டு அச்சியற்றப்பட்டிருக்கிறது. அதில் முதல் ஸூத்ராரம்ப வியாக்கியானத்தில் "अथ சப்தத்திற்கு ஆரம்பம் செய்யத்தொடங்கும்பொழுது அதற்கு முந்தின கர்மாக்களாக ஆபஸ்தம்ப ருஷியால் கூறியுள்ள யக்ஞங்களின் பெயர்களையும், முதன் முதல் சரீரஸம்ஸ்காரங்களைச் சொல்லவேண்டியிருக்க அதைவிட்டு யக்ஞங்களை சொன்னதற்கு ஸமாதானமும் आचारात् என்பதால் "ப்ரத்யக்ஷமாய வேதத்தால கூறுவிட்டாலும், எல்லா தேசங்களிலும் எல்லாககாலங்களிலும், எல்லா வேதங்களையும் அறிந்த பெரியோர்கள் லௌகிகப்பயனில்லாமற்போனாலும், இடைவிடாமல் பிரிக்காமல் ஆதரவுடன் எதைச்செய்துவருகிறார்களோ அதுவே ஆசாரம்.

இதற்கு வேறு மூலமில்லாமலிருந்தாலும் தனக்கு மூல பூதமானவேதத்திலிருந்து அனுமானம் செய்யப்படுவதால், ப்ரத்யக்ஷ சுருதியால கூறியதை முதலிலும ஆனுமானிக ச்ருதியால ஸ்மார்த்தகர்மாக்களைப பிறகும கூறியதாக அர்த்தம் செய்கிறார். க்ருஹ்யஸூத்திரம் கண்டம 1.

இதில் பதினேரு ஸூத்திரங்கள் பரிபாஷை. ஆபஸ்தம்பரால் சொல்லிய பூர்வ அபர ஸ்மார்த்தகர்மாக்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாயுள்ளது. 12-வது ஸூத்திரம முதலாக எல்லா ஹோமங்களுக்கும் ஸாதாரணமாயுள்ள பூர்வாங்க உத்திராங்கங்களைச் சொல்லியிருக்கிறார். (தொடரும்)

க்ருஹ்யக்ஞ, வி. உமாமகேச்வரசாஸ்திரி,

காட்டுமன்னார்கோவில்.